22nd September 1955]

Sri T. SHANMUGAM : அந்த போர்டுகளில் இனிமேல் ஹிந்தியிலே எழுத வேண்டுமென்று மத்திய சர்க்காரிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறதா? (சிரிப்பு.)

The Hon. Sri B. PARAMESWARAN : சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுக்கவேண்டாம்.

Sri A. RATNAM : கனம் அமைச்சர் அவர்களை அழிக்கும் வேலை செய்யச் சொல்லவில்லை. போர்டுகளை ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக தமிழில் எழுதிப் பொருத்த வேண்டுமென்று தான கேட்டுக் கொண்டேன். திருவண்ணாமலை பஸ்களில் ஹிந்தி எழுத்துக்களும் இருக்கின்றன. எதற்காக ஹிந்தியில் எழுதப்பட்ட போர்டுகள் பொருத்தப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri B. PARAMESWARAN : ஹிந்தியில் எழுதியிருப்பதுபற்றி சர்க்காருக்குத் தெரியாது. போர்டுகளைத் தமிழில் எழுதுவதற்கு முயற்சி செய்கிறேன்.

Sri S. PANCHAKSHARAM : நகரத்தில் எழுதப்படிக்கத் தெரியாத மக்கள் பெருவாரியாக இருக்கிறார்கள். இவர்கள் பஸ்கள் எந்த வழிகளில் செல்கின்றன என்று தெரிந்து கொள்ளுவதற்கு சர்க்கார் வழி செய்யுமா ?

The Hon. Sri B. PARAMESWARAN : பஸ்களில் ரூட் நெம்பர்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்தந்த நெம்பர் பஸ் ஸ்டாண்டுகளில் அந்தந்த பஸ்கள் நிற்கின்றன.

Report of the Secondary Education Commission

* 2385 *Q.*—Sri N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government constituted any committee in 1954 to examine the recommendations of the Secondary Education Commission?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, Sir.

Sri N. K. PALANISAMY : சமீபத்தில் ஸிண்டிகேட் செகண்டரி படிப்பை 10 வருஷங்களிலிருந்து 11 வருஷங்களாக ஆக்குவதாக முடிவு செய்திருக்கிறது. இது பற்றி சர்க்கார் அபிப்பிராயம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது ஸிண்டிகேட் 'Pre-University Course' என்ற ஒரு வருஷப் படிப்பும் Degree Course-யை மூன்று வருஷ படிப்பாகவும் வகுத்திருக்கிறது. அதற்கும் செகண்டரி கல்விக்கும் சம்பந்தமில்லை.

Reconstitution of University bodies according to recommendation of Radhakrishnan Commission.

* 2386 *Q.*—Sri N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Central Government have sent a circular to this Government to amend the University Acts so as to reconstitute the Syndicate, the Senate and the Academic Council and other University bodies according to the recommendations of the Radhakrishnan Commission; and

(*b*) if so, the action taken thereon?